# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி
## மதிப்பீட்டுத் தாள் 2023 – 2024
## வளர்தமிழ் 4

TEDC

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 120 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

TEDC

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. திராவிட மொழிகளின் மூலமொழி ________________ .

   ( ஆங்கிலம், தமிழ், வடமொழி )

2. இளங்கோவடிகள் எழுதிய நூல் ________________ .

   ( மூதுரை, தொல்காப்பியம், சிலப்பதிகாரம் )

3. த்,ப்,ர் என்பன ________________

   ( உயிர்மெய் எழுத்துகள், உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள் )

4. வீரம் என்பதன் பொருள் ________________

   ( தெளிவு, அஞ்சாமை, பணிவு )

5. இராவணனது கொடி ________________

   ( வீணைக்கொடி, புலிக்கொடி, மீன்கொடி )

6. குளிர் என்பதன் எதிர்ச்சொல் ________________ .

   ( தண்ணீர், தளிர், வெப்பம் )

7. ‘‘நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை ...’’ என்ற பாடல் இடம்பெற்ற நூல் ________________ .

   ( நல்வழி, நாலடியார், ஆத்திசூடி )

8. அங்கே பல ஓவியங்கள் உள்ளன. ________________ உனக்குப் பிடித்ததை எடு.

   ( இவற்றுள், அவற்றுள், ஒவ்வொன்றும் )

TEDC

9. பாட்டி ஓய்வு நேரத்தில் செய்தித்தாள் ______________ .

( வாசிப்பர், வாசிப்பான், வாசிப்பார் )

10. தோற்கருவிகளை ______________ என்றும் அழைப்பர்.

( முழவுகள், அணிகலன்கள், மட்பாண்டங்கள் )

11. நீ ______________ தாய்நாட்டையும் தாய்மொழியையும் போற்ற மறவாதே!

( தனது, உனது, எனது )

12. **பழமொழி:**

பழகப்பழகப் ______________ புளிக்கும்.

( தேனும், பாலும், கூழும் )

13. சேரன் செங்குட்டுவன் ______________ ச் சிலை வடித்தான்.

( கண்ணகிக்கு, மாதவிக்கு, கோவலனுக்கு )

14. தமிழ்மொழியிலுள்ள முதல் எழுத்துகள் ______________ .

( 247, 30, 18 )

15. சிங்கத்தை அழிக்கத் திட்டம் போட்ட விலங்கு ______________ .

( குதிரை, நரி, முயல் )

TEDC

16. **ஒலிவட்டு:**

நாடுகாத்த சிறுவன் என அழைக்கப்பட்டவர் ________________ .

( ஆபிரகாம்லிங்கன், பிரிங்கர், குற்றாலீசுவரன் )

17. ________________ ஒற்றுமையாக வாழுங்கள்!

( நாங்கள், நீங்கள், அவர்கள் )

18. நான் பாடிக் கொண்டிருந்தேன். ________________ ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தார்.

( இப்போது, எப்போது, அப்போது )

19. கள்வனைக் கண்ட நாய்கள் ________________ .

( கரைந்தன, குரைத்தன, முழங்கின )

20. **குறள்:**

தொட்டனைத்து ________________ மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு

( ஊறும், பெருகும், குறையும் )

21. உழவர் ________________ இன்றி உழைக்கின்றனர்.

( ஊண்உறக்கம், ஓட்டமும்நடையும், மேடுபள்ளம் )

TEDC

22. 90 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________

( தொண்நூறு, தொண்ணூறு, தொன்னூறு )

23. மா, பலா, வாழை என்பன ______________ .

( முப்பால், முத்தமிழ், முக்கனி )

24. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல் ______________ .

( இல்லம், வீடு, பள்ளி )

25. யாழிசைப்போர் ______________ என அழைக்கப்பட்டனர்.

( விறலியர், பாணர், கூத்தர் )

26. உள்ளும் புறமும் தூயவனே ______________ மாந்தன்.

( உயர்ந்த, தாழ்ந்த, வீழ்ந்த )

27. மாடுகள் வயல்வெளியில் புல் ______________ கொண்டிருந்தன.

( மேய்ந்து, கொய்து, ஆய்ந்து )

28. எலி + பொறி ______________

( எலிப்பொறி, எலிபொறி, எலிப்பொரி )

29. கரையில்லாதது என நாலடியாரில் குறிப்பிடப்படுவது ______________ .

( அகவை, பணம், கல்வி )

30. அரசன் படை நடத்திச் செல்லும்போது முழங்கிய முழவு

______________ .

( கொடைமுரசு, படைமுரசு, மணமுரசு )

புள்ளிகள் 30

TEDC

## 2) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.

1. ______________________ உறங்கவைக்கத் தாலாட்டுப் பாடலைப் பாடுவர்.

( குழந்தை )

2. அப்பா ______________________ த் தண்ணீர் ஊற்றினார்.

( செடிகள் )

3. உலகெங்கும் வாழும் மக்கள் ______________________ துன்புறுகின்றனர்.

( போர் )

4. ஆண்டுவிழாவில் ______________________ சிறப்பு உரையாற்ற அழைத்தனர்.

( ஆசிரியர் )

5. கோழி ______________________ வாழ்ந்து வந்தது .

( குஞ்சுகள் )

புள்ளிகள் 05

## 3) பின்வரும் சொற்களை உமது வாழிடமொழியில் எழுதுக.

1. நூலகம் ______________________
2. பெற்றோர் ______________________
3. கதிரவன் ______________________
4. வானவில் ______________________
5. மருத்துவமனை ______________________

புள்ளிகள் 05

TEDC

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| அவர்கள் | அவை | அது |
| அவள் | நீங்கள் | |

1. உலகில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர். ________________ வெவ்வேறு விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

2. காகம் ஒரு கன்னங்கரிய பறவை. ________________ அதிகாலையில் துயில் எழும்.

3. ________________ நல்லவர்களுடன் சேர்ந்தால் நல்லறிவைப் பெறுவீர்கள்!

4. கயல்விழி மிகவும் நல்லவள். ________________ எப்பொழுதும் பெரியவர்களை மதித்து நடப்பாள்.

5. வீதியில் பல உந்துகள் செல்கின்றன. ________________ சூழலை மாசுபடுத்துகின்றன.

TEDC

புள்ளிகள் 05

## 5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. நாம் பிறருடைய ________________ வருந்தும்படி பேசக்கூடாது.

   ( மனம், மணம் )

2. வாசிக்கும் பழக்கம் எமது ________________ மேம்படுத்தும்.

   ( அறிவை, அரிவை )

3. கோலாட்டம் இன்று அரங்கக் ________________ மாறியுள்ளது.

   ( களையாக, கலையாக )

4. இடர்வரும் ________________ உதவாத நண்பனை நம்பாதே!

   ( வேளையில், வேலையில் )

5. நான் தாயகத்துக்கு ________________ சென்றேன்.

   ( விண்ணுந்தில், வின்னுந்தில் )

புள்ளிகள் 05

TEDC

6) **பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. பழந்தமிழர் இசை நுணுக்கங்களை நன்கு அறிந்து

 ______________________ .

2. நாம் பொதுச்சொத்துகளைப் பாதுகாக்க ______________________ .

3. குளத்தில் தவளைகளும் மீன்களும் ______________________ .

4. வெற்றி பெற்ற வீரன் மக்களால் ______________________ .

5. நண்பன் அடுத்த கிழமை எனது வீட்டுக்கு

 ______________________ .

புள்ளிகள் 10

TEDC

## 7) மிகப் பொருத்தமான சொற்களைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| நட்பு | சுன்னாகம் | தமிழரின் |
| எழுதினார் | ஆசிரியராக | |

குமாரசுவாமிப்புலவர் யாழ்ப்பாணத்தில் ________________ என்ற ஊரில் பிறந்தார். இவர் சிறுவனாக இருந்த பொழுதே பல பாடல்களை ________________. இவர் தமிழை விரும்பிக் கற்றார். குமாரசுவாமிப்புலவர் தமிழ் ________________ப் பணியாற்றினார். இவர் ஆறுமுகநாவலருடன் நெருங்கிய ________________ க் கொண்டிருந்தார். இவர் தமிழுக்குப் பல பணிகள் ஆற்றினார். இதனால் இவர் ________________ உள்ளங்களில் இன்றும் வாழ்கின்றார்.

புள்ளிகள் 05

TEDC

## 8) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?

______________________________

______________________________

2. ஆடிப்பிறப்பன்று செய்யப்படும் உணவுப் பண்டங்கள் இரண்டு தருக.

______________________________

______________________________

3. அரச கட்டளைகளை மக்களுக்கு அறிவிக்கப் பயன்படுத்திய தோற்கருவி எது?

______________________________

______________________________

4. தனித்து இயங்கமாட்டாத எழுத்துகள் எவை?

______________________________

______________________________

5. சொற்பொருள் தருக.

ஆதி ______________

முழங்கல் ______________

TEDC

புள்ளிகள் 10

## 9) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பழங்குடி மக்கள் இலங்கையில் இன்றும் வாழ்கின்றனர். அவர்களை வேடர் என்றும் அழைப்பர். பழங்குடிமக்கள் தங்கள் வாழ்க்கையைக் காடுகளில் கழிக்கின்றனர். கூலங்கள் பயிரிடுதல், வேட்டையாடுதல், தேன் எடுத்தல், மந்தை வளர்த்தல் போன்றன அவர்களது தொழிலாகும். அவர்கள் இயற்கையாகக் கிடைக்கும் பழங்கள், தேன், கிழங்குகள் போன்ற உணவுகளை உண்கின்றனர். அதனால் அவர்கள் நோயின்றி வாழ்கின்றனர். பழங்குடி மக்களது வாழ்க்கை இயற்கையோடு இணைந்ததாய் அமைந்துள்ளது.

1. பழங்குடி மக்களை வேறு எப்படி அழைப்பர்?

   ________________________________

2. யார் தங்கள் வாழ்க்கையைக் காடுகளில் கழிக்கின்றனர்?

   ________________________________

3. பழங்குடி மக்களின் தொழில்கள் இரண்டைத் தருக.

   ________________________________

4. இயற்கையாகக் கிடைக்கும் உணவுகள் எவை?

   ________________________________

5. பழங்குடி மக்களது வாழ்க்கை எதனோடு இணைந்ததாய் அமைந்துள்ளது?


   ________________________________

   ________________________________

TEDC

புள்ளிகள் 10

10) **தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதையைத் தொடர்ந்து எழுதுக.**



TEDC

ஒரு நாள் ஒரு காகம்.......

புள்ளிகள் 15

TEDC